செ.வெ.எண்: 41 நாள்: 15.08.2016

**புதுக்கோட்டையில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் 88 பயனாளிகளுக்கு ரூ.12,32,460/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் 70வது சுதந்திர தினவிழா மாவட்ட நிர்வாகம் சார்பில் இன்று (15-08-2016) சிறப்பாக நடைபெற்றது. காலை 09.35 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜே.லோகநாதன்,இ.கா.ப., அவர்களுடன் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் சுதந்திரப் போராட்ட தியாகிகளை கௌரவிக்கும் வகையில் தியாகிகளுக்கு கதர் ஆடைகளை அணிவித்து குடைகளை வழங்கியும், வருவாய் துறையின் சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.96000/- மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பில் சட்ட பட்டதாரிகளுக்கு சொந்தமாக தொழில் துவங்க நிதிஉதவித்தொகைக்கான காசோலைகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.18500 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.45600 மதிப்பில் விலையில்லா சலவைப்பெட்டிகளும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூ.20000 மதிப்பில் திருமண மானிய நிதி உதவித்தொகைக்கான காசோலையும், 2 பயனாளிகளுக்கு ரூ.24000 மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளும், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் முன்னாள் தமிழக முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜுலை 15ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடுதலில் சிறந்த பள்ளியாக தேர்வு செய்யப்பட்ட 2 பள்ளிகளுக்கு ரூ.37500 மதிப்பிலான காசோலைகளும், வேளாண்மைத்துறையின் சார்பில் மாநில பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற 1 பயனாளிக்கு ரூ.25000 மதிப்பில் நிதிஉதவித்தொகைக்கான காசோலையும், மாவட்ட பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற 2 பயனாளிகளுக்கு ரூ.25000 மதிப்பில் நிதிஉதவித்தொகைக்கான காசோலையும், 4 பயனாளிகளுக்கு ரூ.1140 மதிப்பில் இடுபொருட்களும், மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.9920 மதிப்பில் நலத்திட்ட உதவியும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.81800 மதிப்பில் நவீன செயற்கை கால்களும், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார்பில் 10 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி குழு மற்றும் நலிவுற்றோர் தனிநபர் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.50000 மதிப்பிலான காசோலைகளும், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு துவக்க நிதி திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.550000 மதிப்பிலான காசோலைகளும், புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 18 பயனாளிகளுக்கு ரூ.98000 மதிப்பில் நீச்சல் போட்டியில் வாகையர் பட்டம் பெற்றமைக்கு ரொக்கப்பரிசுகளும் என மொத்தம் 88 பயனாளிகளுக்கு ரூ.12,32,460/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

முன்னதாக காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 15 காவலர்களுக்கும், வருவாய் துறையில் சிறப்பாக பணியாற்றிய 56 அலுவலர்களுக்கும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் சிறப்பாக பணியாற்றிய 4 அலுவலர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் சிறப்பாக பணிபுரிந்த 7 அலுவலர்களுக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் சிறப்பாக பணிபுரிந்த 8 அலுவலர்களுக்கும், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் சிறப்பாக பணிபுரிந்த 6 அலுவலர்களுக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளை சிறப்பாக செயலாற்றிய 10 ஊராட்சி மன்றத்தலைவர்களுக்கும், 2015-16ம் ஆண்டிற்கு சுயஉதவிக்குழுக்களுக்கு 100 சதவீதம் கடன் வழங்கிய 11 அலுவலர்கள் மற்றும் வங்கி மேலாளர்களுக்கும், வேளாண்மைத்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 6 அலுவலர்களுக்கும், வேளாண் பொறியில் துறையில் சிறப்பாக பணிபுரிந்த 1 அலுவலருக்கும், தோட்டக்கலைத்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 6 அலுவலர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறையில் மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தில் சிறப்பாக பணிபுரிந்த 1 அலுவலருக்கும், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தில் சிறப்பாக பணிபுரிந்த 3 அலுவலர்களுக்கும், மாவட்ட நிலஅளவை அலுவலகத்தில் சிறப்பாக பணிபுரிந்த 5 அலுவலர்களுக்கும், ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலத்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 4 அலுவலர்களுக்கும் என மொத்தம் 206 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் 8 பள்ளிகளை சேர்ந்த 806 மாணவ, மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் முதலிடம் பெற்றமைக்காக சுப்பிரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளிக்கும், இரண்டாமிடம் பெற்றமைக்காக புதுக்கோட்டை தூயமரியன்னை மேல்நிலைப்பள்ளிக்கும், மூன்றாமிடம் பெற்றமைக்காக கந்தர்வக்கோட்டை வித்யாவிகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கும் சான்றிதழ்களும், மேலும், கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுக்கும் கேடயம், சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.கு.மீராபரமேஸ்வரி, புதுக்கோட்டை சார்ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு.வி.சி.ராமையா, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.மு.வடிவேல்பிரபு (இலுப்பூர்), திருமதி.இரம்யாதேவி (அறந்தாங்கி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரக அலுவலக மேலாளர் (நீதியியல்) திரு.கண்ணாகருப்பையா, ஒன்றியக்குழு தலைவர் திருமதி.வெள்ளையம்மாள்பழனிவேலு, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் திருமதி.கண்ணம்மாள்சின்னப்பா, திருமதி.அமுதாபாலு, வட்டாட்சியர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**